OS. 39/2014

**நாள். 19.01.2023.**

**வா.சா. 4 –** நவநீதகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் வாதி வீரபாண்டியன் அழைத்ததன்பேரில் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் வாதி சொல்லித்தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்லித்தான் தயாரிக்கப்பட்டது. வாதிகளுக்கு உயில் பத்திரத்தின் பிரகாரம் சொத்து பாத்தியம் இருப்பதாக சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 23.05.1960ல் எழுதியதாக சொல்லப்பட்டுள்ள உயில் பத்திரத்தின் விவரத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த உயில் எழுதும்போது எனக்கு வயது 1 ஆகும். நான் 1959ல் பிறந்தேன். உயில் பத்திரத்தை யார் தயாரித்தது என்பதும் என்ன விவரங்கள் எழுதப்பட்டது என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முத்துவெயிலுக்கு எத்தனை இலக்க சொத்துக்கள் பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே நடைபெற்ற வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் வீட்டில் வைத்து என் அப்பா பஞ்சாயத்து பேசும் போது எனக்கு தெரியும். அவ்வாறு பஞ்சாயத்து பேசும்போது எத்தனை வழக்குகள் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு நம்பர்களும் எனக்கு தெரியாது. முத்துவெயிலு உயிலில் கையெழுத்து போட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனாருடைய கையெழுத்து போட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயிலில் போட்டுள்ள மற்ற நபர்களின் கையெழுத்துக்களும் எனக்கு தெரியும் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முத்துவெயிலு இறக்கும்போது நான் அந்த ஊரில் இல்லை என்றும் அப்போது வெளியூரில் தான் நான் வேலை பார்த்தேன் என்றும் சொன்னால் சரிதான். முத்துவெயிலு கையெழுத்து போட்ட மற்ற ஆவணங்களை நான் பார்த்தது கிடையாது என்றால் சரிதான்.

முத்துவெயிலு எந்த வருடம் இறந்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் வாதி வீரபாண்டியன் என்னுடைய உறவினர் என்றால் சரிதான். முத்துவெயிலையும் அவர் உயில் எழுதி வைத்ததையும் எனக்கு எதுவும் தெரியாது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது)